## வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி - 2016

---

வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியினதும் (''கம்பனி'') கம்பனியின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களினதும் மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் (''தொகுதி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் மூலம் இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நான் உதவியைப் பெற்றிருந்தேன்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

------------------------- -----

### 2.1 அபிப்பிராயம்

-----------------------------

எனது அபிப்பிராயத்தில், கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் தொகுதியின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் என்பன 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனி மற்றும் தொகுதியில் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 ஏனைய விடயம்

-----------------------------

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் பொதுத்துறையிலுள்ள மற்றுமொரு பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றினால் கணக்காய்வு செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களினால் 2016 மே 27 இல் இந்நிதிக்கூற்றுக்கள் மீது மாற்றஞ்செய்யப்படாத அபிப்பிராயமொன்று வெளிப்படுத்தப்பட்டது.

### 2.3 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில் :

(i) கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றிருக்கின்றேன் என்றும்,

(ii) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியானது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2015 இன் 09 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவு | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து 2008/2009 இலிருந்து ஆரம்பிக்கின்ற முன்னைய ஐந்து ஆண்டுகளின் மதிப்பீடாக ரூபா 270,368,574 கூட்டுத்தொகையான வருமான வரி மதிப்பீடுகளினை கம்பனி பெற்றிருந்த போதிலும், 2017 திசெம்பர் 27 வரையிலும் அந்த வரியினை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, செலுத்துகையின் தாமதத்தினால் ரூபா 126,061,875 மொத்தமான 50 சதவீத அபராதத்தினை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விதித்திருந்தது. எவ்வாறாயினும், நிதிக் கூற்றுகளுக்கு குறிப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டதைத் தவிர வரிப் பொறுப்புகளுக்கு எவ்வித ஏற்பாட்டையும் கம்பனி வழங்கியிருக்கவில்லை. |
| (ஆ) | அரச பெறுகைகள் வழிகாட்டல்கள் | அரச பெறுகைகள் வழிகாட்டல்களுடன் கம்பனி இணங்கியிருக்க வேண்டிய போதிலும், அதனுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 இன் பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவு | கம்பனியினால் அதன் தொடக்கத்திலிருந்து கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | கம்பனியின் அமைப்பு அகவிதியின் 75 ஆம் பிரிவு | 2016 திசெம்பர் 31 இல் ஐந்தில் மூன்று பணிப்பாளர்கள் அவர்களின் கடமைகளிலிருந்து ராஜினாமாச் செய்திருந்தனர். எவ்வாறாயினும், 2017 சனவரி 23 வரையேனும் புதிய பணிப்பாளர்களினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | மஹாப்பொல நம்பிக்கை நிதியம் மற்றும் கம்பனிக்கிடையே ஏற்படுத்திக் கொண்ட நிதி முகாமைத்துவ உடன்படிக்கையின் 2.2 ஆம் பந்தி | (i) உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் முதலீட்டுக் குழுவிற்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், இந்தக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மாணங்களின் செல்லுபடித் தன்மை கணக்காய்வில் கேள்விக்குரியதாகக் காணப்படுகின்றது. |

(ii) இரண்டு தரப்பினர்களினாலும் இணங்கப்பட்ட முதலீட்டுத் திட்டத்தின் பிரகாரம், கம்பனியின் நிதியத்திற்கான வருமானம் எம்ரீஎவ் இனால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் காலத்திற்கு காலம் மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு (எம்ரீஎவ்) இற்கு அனுப்பப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2015 நவம்பர் 16 மற்றும் 2017 சனவரி 17 இல் கம்பனிக்கு எம்ரீஎவ் இனால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களான ரூபா 250,000,000 மற்றும் ரூபா 50,000,000 கோரிக்கைகள் கம்பனியினால் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் தொகுதிகளின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், முன்னைய ஆண்டின் கம்பனியின் ரூபா 113,659,868 வரிக்கு முன்னரான தேறிய இலாபம் மற்றும் தொகுதியின் ரூபா 186,420,983 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது கம்பனி மற்றும் தொகுதியின் செயற்பாடுகள் முறையே ரூபா 86,361,454 மற்றும் ரூபா 585,948,925 வரிக்கு முன்னரான நட்டமொன்றினை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளின் முறையே ரூபா 200,021,322 மற்றும் ரூபா 399,527,942 ஆன பற்றாக்குறைகளினை காட்டுகின்றது. கம்பனி மற்றும் தொகுதியின் தேறிய முதலீட்டு வருமானம் முறையே ரூபா 194,315,026 மற்றும் ரூபா 680,556,237 இனால் குறைவடைந்தமை நிதிசார் விளைவுகளில் இந்தப் பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) காசு வெளிப்பாய்ச்சல்களைக் குறைப்பதனூடாக சந்தைக் கேள்வியினை எதிர் கொள்வதற்கான சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை முறையாக அமுல்படுத்துவதற்கு கம்பனி தவறியிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும் கம்பனியினால் வலுவான வாடிக்கையாளர் தளமொன்று அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கம்பனியானது 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மட்டும் ரூபா 699.67 மில்லியன் ஒட்டுமொத்த நட்டத்தினை தாங்கியிருந்தது.

(ஆ) கம்பனிக்கும் மஹாபொல நம்பிகைப் பொறுப்பு நிதியத்திற்குமிடையிலான நிதி முகாமைத்துவ உடன்படிக்கையின் பிரகாரம், கம்பனியானது மஹாபொல நம்பிகைப் பொறுப்பு நிதியத்தை முகாமை செய்யும் நோக்கத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியின் அக விதியில் இந்த நோக்கம் தொடர்பாக எந்த ஏற்பாடும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே நிதி முகாமைத்துவ ஒப்பந்தத்தின் செல்லுபடி நிலையானது கேள்விக்குறியாக உள்ளது.

## 4.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கம்பனியானது 2003 இல் இலங்கை மத்திய வங்கியில் முதற்தர வணிகராக பதிவு செய்யப்பட்டிருந்தது. கம்பனிக்கும் மகாபொல நம்பிக்கை நிதியத்திற்குமிடையிலான (எம்.ரீ.எவ்) ஒப்பந்தத்தின் பிரிவு 2.1 க்கு அமைய, எல்லா முதலீட்டுத் தீர்மானங்களும் எம்.ரீ.எவ் இனால் நியமிக்கப்பட்ட முதலீட்டு குழுவினால் எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் அந்தத் தேவைப்பாட்டுக்கு மாறாக கம்பனியின் பிரதான வணிகரும் சீ.ஈ.ஓ (CEO) உம் வரையறுக்கப்பட்ட வேர்ச்சுஅல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் ட்ரேடிங் லங்கா (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட ட்ரில்லியன் செக்யூரிட்டீஸ் (தனியார்) கம்பனி ஆகிய இரண்டு தனியார் கம்பனிகளுடன் மீள் கொள்வனவு நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கான முதலீட்டுத் தீர்மானங்களை எடுப்பதில் சம்பந்தப்பட்டிருந்தனர். மேலும் இது தொடர்பில் எந்த அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை. பின்னர், கம்பனி இது தொடர்பில் தடயவியல் கணக்காய்வு நடாத்தியதோடு, தடயவியல் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் மேற்படி அலுவலகர்கள் முறையற்ற கொடுக்கல் வாங்கலொன்றில் ஈடுபட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்வுத் திகதி வரை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக கம்பனியால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) இலங்கை மத்திய வங்கியானது (சீ.பி.எஸ்.எல்) 2009 யூன் 24 ஆம் திகதிய 2009 இன் 01 ஆம் இலக்க உள்ளூர் திறைசேரி பிணைகள் (ஆரம்ப விநியோகஸ்தர்) பிரமாணங்களின் 11(2) ஆம் பிரமாணங்கள் மற்றும் 2009 யூன் 24 ஆம் திகதிய 2009 இன் 01 ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்கு மற்றும் பிணைகள் (ஆரம்ப விநியோகஸ்தர்) இன் 11(2) இன் பிரமாணங்களினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு வாடிக்கையாளர்களுடனான பிரதான மீள்கொள்வனவு உடன்படிக்கையின் உறுப்புரைகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களினால் மீள்கொள்வனவு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய எல்லா நிலுவைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தி கம்பனிக்கு 2015 ஆகஸ்ட் 07 இல் உத்தரவு ஒன்றினை விநியோகித்திருந்தது. சீபிஎஸ்எல் இந்த உத்தரவை ரத்துச் செய்யாததினால், கம்பனி அதன் பிரகாரம் நடப்பதற்கு பொறுப்பாகவுள்ளது.

(iii) கம்பனி சீ.பி.எஸ்.எல் இனால் மேற்கொள்ளப்பட்ட வழிகாட்டலுக்கு எதிராக 2015 ஆகஸ்ட் 18 இல் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் முறையீடு ஒன்றினை பதிவு செய்ததால் மேல் முறையீட்டு நீதிமன்றமானது 2015 செப்தம்பர் 04 வரை சொல்லப்பட்ட உத்தரவை செயல்படுத்த வேண்டாம் என இடைக்கால தடை உத்தரவு ஒன்றினை பிறப்பித்திருந்தது. எவ்வாறாயினும், எல்லா பொறுப்பான தரப்பினர்களாலும் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதல்களினை கருத்திற் கொண்டதன் பிறகு, 2016 மார்ச் 29 இல் மேல் முறையீட்டு நீதிமன்றத்தால் மேற்படி இடைக்கால உத்தரவானது திருப்பிப் பெறப்பட்டிருந்தது. பின்னர் மேல் முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக கம்பனி 2016 ஏப்ரல் 18 இல் உச்ச நீதிமன்றத்தில் மற்றுமொரு முறையீட்டினை மேற்கொண்டது. ஆனால் உச்ச நீதிமன்றத்தால் கம்பனிக்கு சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும், கம்பனி 2016 திசெம்பர் 27 இல் சீபிஎஸ்எல் இற்கு

தடையவியல் கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. எவ்வாறாயினும், சீபிஎஸ்எல் இந்த அறிக்கைத் திகதி வரை இது தொடர்பாக கம்பனிக்கு எந்த உத்தரவும் வழங்கியிருக்கவில்லை.

**(ஆ) அனுமதிக்கப்படாத தரகுக் கட்டணங்கள்**

2014 இல் இரண்டு தனியார் கம்பனிகளுக்கு (வைட் க்ரோவ் ஹோல்டிங்ஸ் மற்றும் அஸ்ட்ரல் ஹெப்பிடல் ஹோல்டிங்ஸ்) செலுத்திய அனுமதிக்கப்படா தரகுக் கட்டணம் ரூபா 19,725,000 தொடர்பில் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (சீஐடி) கம்பனி முறைப்பாடு ஒன்றினைச் செய்திருந்தது. கட்டணத்தை செலுத்துவதற்கு முன்னர் இந்த கம்பனி சீபிஎஸ்எல் இல் நிதிக்கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்தியிருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும் 2016 ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் இந்தக் கொடுக்கல் வாங்கல்களினை வெளிப்படுத்துவதற்கு கம்பனி தவறியிருந்தது.